Registered as a News Paper in Ceylon

P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

பிரோதிஷ்டை (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

தனிப்பிரதி: சதம் 10

[புத்-சுடி] [illegible] ஏவிளம்பிஷு சித்திரை மீ உ அஉ வெள்ளிக்கிழமை (10 MAY. 1957) [இல- ரு]

### சமராச்சிய மாநாட்டுக்குத் தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்

இலண்டனில் நடக்கும் பிரித்தானிய சமராச்சிய முதல்மந்திரிகள் மாநாட்டுத் தொடர்பில் இலங்கையிலிருந்து வெளியாகும் ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மும்மொழித் தினசரிப் பத்திரிகை ஆசிரியர்களுள் ஒவ்வொரு மொழிப் பிரதிநிதியாய் ஒவ்வொருவர் மாநாட்டுப் பகுதியினரால் அழைக்கப்பட்டார் என்றும் தமிழ் மொழித் தினசரி ஆசிரியராய் வீரகேசரி ஆசிரியர் ஸ்ரீ கே. பி. ஹரன் அவர்கள் சென்றிருக்கின்றாரென்றும் அறியவருகின்றது.

—0—

### அரசாங்க முறைகளை எதிர்த்துப் புத்தகுரு உண்ணாவிரதம்

மாத்தறைப் பகுதியைச் சேர்ந்தகித்தலகமவிலுள்ள புத்தகுரு வண ஸ்ரீ. வெல்லதோட்டபஞ்ஞாசிதீரோ என்பார் அரசாங்கத்தின் சில முறைகளை எதிர்த்து உண்ணாவிரதமிருக்கின்றாராம். அவர் குறிப்பிட்டுள்ள நான்கு குற்றங்களுள் ஒன்று மொலதுவப் பகுதியில நடக்கும் கிராமச்சங்கத் தேர்தலில் அபேட்சகர் ஒருவருடைய வீடே சீட்டுப் போடும் இடமாய் அமைக்கப்பட்டுள்ளமையாம்.

# சிவஞான மாபாடியம்தந்தசெம்மல்

## சிவஞானசுவாமிகளின் வாழ்க்கைச் சிறப்பு

### குருபூசை வழிபாடு செய்தல் சைவ மக்கள் கடன்

இன்று நம் தமிழகத்திலன்றி வட இந்தியாவிலும் பௌத்தம் தலையெடுக்கின்றது. உலோகாயத வாழ்க்கை முற்றிலும் பரவி இருக்கின்றது. மேல்நாட்டுப் பொதுவுடைமையே ஒவ்வொரு மனிதன் உள்ளத்திலும் குடிகொண்டிருக்கிறது. இப்போது மக்கள் உய்யும் வகை தெரியாது தடுமாறுகிறார்கள். இவ்விதமான ஒரு நிலைமை இற்றைக்கு இருநூறு வருடங்கட்குமுன் தமிழகத்தில் இஸ்லாம் மதம் தலையெடுத்திருந்த காலத்தில் இருந்தது. இதனால் சைவமதம் குன்றியது. வைதீக சைவநெறியில் அபிமானங்கொண்ட தமிழகத்துச் சைவர்கள், சைவத்தைப் பாதுகாப்பதற்காக தம்பொருள், விளைநிலம், கோயில் ஆதியன

..............................

ஸ்ரீ செ. கோவிந்தசாமி அவர்கள்

..............................

வற்றையெல்லாம், சைவாதீன மடங்களுக்குத் தரும சாதனம் செய்தனர். இவ்வாறு தமிழ்நாடு இருந்த காலத்தில் சைவ உலகம் செய்த அருந்தவப்பேறாய்த் தென்பாண்டி நாட்டிலே பாவநாசம் என்னும் திருப்பதிக்கு அண்மையிலுள்ள விக்கிரமசிங்க புரத்திலே பரம்பரைச் சைவவேளாண் குலத்தில் ஆனந்தக்கூத்தர் — மயிலம்மையார் எனும் இது முதுகுரவர்க்கு அரும்பெறல் தவமகவாய் ஒருசற்புதல்வர் தோன்றினர்.

அவரது பிள்ளைத் திருநாமம் முக்களாலிங்கர் என்பது. அவர் பிதா மாதாக்கள் முச்செல்வங்களும் நிறையப்பெற்ற அடியார் சிவபக்திமான்கள் — அடியார்களுக்குத் திருவமுது அளிப்பவர்கள். முக்களாலிங்கர் ஐந்தாண்டில் வித்தியாரம்பஞ் செய்து கல்வி பயின்று வந்தனர். ஒருநாள் பாடசாலையினின்று வீட்டிற்கு வரும் வழியில் திருவாவடுதுறைத் தம்பிரான் முனிவர்களைக் கண்டார். அவர்களை வணங்கினர். சுவாமிகள் எல்லோரும் எமது கிருகத்துக்கு எழுந்தருளித் திருவமுது

தொடர்ச்சி 4-ம் பக்கம்

### வேலணை முத்தமிழ் மன்றம்

மேற்படி மன்றத்தார் வருடந்தோறும் நடத்தும் முத்தமிழ்விழா இவ்வாண்டு 11-6-57-ல் நடைபெறுமாறு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது. பல அறிஞர்கள் இதிற் பங்குபற்றுவார்கள்.

### சுதேச வைத்தியப் பகுதி

அரசாங்க சுதேச வைத்தியப்பகுதிஒன்றை அமைக்கச் சுகாதார மந்திரி தீர்மானித்துள்ளனராம்.

### மன்னார் பாடிகாவலர் இடமாற்றம்

—0—

மன்னார் பாடிகாவலர் நிலையத்தைச் சேர்ந்த சிலர் மன்னார்ப் பகுதியில் மக்களைத் துன்புறுத்தினர்கள் என்ற செய்தித் தொடர்பில், அப்பகுதி அரசாங்க அதிபர் பாடிகாவலர் நிலயத்துக்குச் சென்று விசாரணை நடத்திய சமயத்தில், அவரையே தாக்கப் பாடிகாவலர் பகுதி உதவிப் பரிசோதகர் முயன்றாராம். அத்தொடர்பில் அப்பகுதி மக்கள் பெருந்தொகையினர் பாடிகாவலர் நிலயத்தைச் சூழ்ந்தபொழுதுபாடிகாவலர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து ஒருவர் இறந்தார். இவற்றின் தொடர்பில் ஏழுபேர் மன்னாரிலிருந்து மாற்றப்பட்டுள்ளனர். துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர் விளக்கமறியலில் இருக்கின்றார். மேலே குறித்த உதவிப் பரிசோதகர் தற்காலிகமாக உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அரசியல் அலை

# அஞ்சினவர் கண்களுக்கு ஆகாயம் எல்லாம்..........!

## பாதுகாப்பு ஒழுங்குகள் பலமாக எடுக்கப்படுமாம்!!

### தேசமெங்குந்திகைப்பைத்தருஞ்செய்திகள்!!!

பண்டாரநாயக பிரதமர் பகலும் இரவும் கனவு கண்டபடியே இருக்கின்றார். தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைக் கொடுக்க மறுத்த மனச்சான்று அவரை அளவுகடந்த வகையில் அஞ்ச வைக்கின்றது. அஞ்சி நிற்கும் பிரதமருக்கு அரசியல் வானம் எல்லாம் அச்சத்தை விளைவிக்கும் நிலையிலே தோன்றுகின்றது. தன்வினை தன்னைச் சுடும் என்றபடி தன்பழி தன்னைச் சூழுவதை யார் தடுக்க முடியும்.

ம. ஐ. முன்னணிக்கு அச்சம் பிடித்துவிட்டது என்று உண்மை உலகம் முழுவதும் அறியும் மேலே பார்த்தால் ஐக்கிய தேசியக் கட்சியினரின் தோற்றம்; வடக்கும் கிழக்கும் மொழிப் போராட்டத் தொண்டர்களின் தோற்றம். இடது பக்கம் தொழிலாளர் தலைவர்களின் தே[illegible] உள்ளே நெஞ்சத்[illegible] வினையின் தோற்றம். இவ்வளவுதான் உலகம்.

இதற்கிடையில் இந்தப் பாதுகாப்பு ஒழுங்குகள் என்று சொல்லப்படும் காவல் முறை இருக்கின்றதே. இதை ஏன் பிரதமர் எண்ணுகின்றார்? பாடிகாவலர் வேலி பயிரை மேய்ந்தவாறு அதிகாரபீடத்தை அவமதிக்கத் துணிந்து விட்டதே. எனவே இராணுவத்தின் உதவியை நாடிப் பாடிகாவலரிடமிருந்து பாதுகாவல் பெற்றுக் கொள்வதற்கா?

திருக்கோணமலையில் நடராசன் தேகத்தைத் தியாகஞ் செய்தான். தனுசுக்கோடி மண்ணுலகு நீத்தான். இரும்புக் கொல்லைத் தோட்டத்தில் வாழ்க்கையைத் துரும்பாய் மதித்து வான்புகழ் எய்தினர். யாரால்? பாடிகாவலரால்! இலங்கையில் ஆட்சி இப்பொழுது பாடிகாவலர் கை[illegible] பண்டாரநாயக பாதுகாவல் ஒழுங்கு செய்வது முறைதானே.

# இறைவனிடம் ஒப்படைத்தல் என்பது என்ன?

## தாங்கமுடியாத துன்பம் வரும்பொழுது நாம் ஒழுகவேண்டிய முறை

இறைவனிடம் எம்மை ஒப்புக்கொடுத்தல்என்பது, எங்கள் அச்சங்கள் துன்பங்கள் ஆகிய எல்லாவற்றின் பொறுப்பையும் இறைவன்பால் ஒப்படைத்தலும், அவ்வாறுஒப்படைத்துக் கட்டின்றி முட்டின்றி இன்புற்றிருத்தலுமாகும். அவருடைய திருநாமத்தை இடைவிடாது ஓதி அவரை இடைவிடாது தியானிப்பதால் எங்கள் மனம் அமைதியும் சாந்தமும் நிரம்பப் பெறுகின்றது. இறைவன் எதைச் செய்தாலும் எங்கள் நன்மைக்காகவே செய்கின்றார். எங்கள் வாழ்க்கையில் ஏற்படும் எவ்வித நிலைமையிலும் இம் மன நிலைமையே நிலைபெறுதல் வேண்டும்.

துன்பம் அனுபவித்தல், எமக்கு நன்மை தரும் ஓர் உரிமையாகின்றது. துன்பத்தை நீக்கும்படி நாம் இறைவனிடம் வேண்டுதல் சமர்ப்பிக்கக்கூடாது. துன்பங்களால் நாம் தாக்குண்டு போகாது தாங்கக்கூடிய சக்தியை எமக்குத் தந்தருள வேண்டுமென்று நாங்கள் வேண்டுதல் செய்ய வேண்டும்.

மானிடப்பிறவி பெறுதற்கரியது. இறைவனைத் தியானித்து அவர்மீது அன்புபூண்டு பக்தர்களாகும்பொருட்டே இப்பிறவி எமக்குத் தரப்பட்டது. இப்பிறவியை நீக்குமாறு நாம் வேண்டக்கூடாது. எங்கள்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்[குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ்.ஏவிளம்பி௵சித்திரை௴ உஅ வ வெள்ளிக்கிழமை

## விருந்தினரோடும் விபரீதம்...?

புத்தவிழாக்கொண்டாட்டத்தின் பொழுது பாரதப் பிரதமரை அழைத்து பாரறியாப் பான்மையில் வரவேற்று புதிதாக அமைக்கப்படும் அநுரத புரியின் திறப்பு விழாவை அப்பெரியாராற் சிறப்பித்து இலங்கை வாழ் இந்தியர்களின் நல உரிமைகளைப் பற்றி எண்ணுவதற்குநாழிகயில்லாத வகையிலே அவரைவழியனுப்பி வைக்கமக்கள் ஐக்கிய முன்னணியார் திட்டம் போட்டிருந்ததை யாவருமறிவர். இதற்கிடையிலே அநுரதபுரித் திறப்பு விழாவிலே இந்திய முதல் அமைச்சர் தலைமை தாங்குவது ஆகாதென்றுசிங்களப் பொதுமக்கள் சிந்தித்து வருகின்றார்களெனவும் ஆகையால் அந்த நிகழ்ச்சியில் பாரதப்பிரதமர் பங்கு பற்றமாட்டார் என்றும் செய்திகள் கூறுகின்றன.

உலக அமைதிக்கு உழைப்பதிலே ஊக்கமெடுக்கும் நேருப் பெரியார் இந்திய நாட்டின் உள்ளூர் விவகாரங்களையே ஊன்றியோசிப்பதற்குரிய அவகாசம் இல்லாதவர். அன்னாருக்கு இந்நாட்டிலே தமிழ்பேசும் மக்களுக்குத் தனிச்சிங்கள மொழிச் சட்டத்தாலும் ஒரு திறப்பட்ட குடியேற்றத் திட்டத்தாலும் நிகழ்ந்து வரும் இன்னல்கள் எத்தகையன என்று அறிவதற்கு வசதியிருக்கமாட்டாது. என்றுமில்லாத அரசியல் நெருக்கடியில் ஈடுபட்டிருக்கும் இலங்கைத் தலைவர்கள் அயல் நாட்டுப் பெரியார்களை அழைத்து ஆளவளாவிக் கொண்டாடுவதற்கு உகந்தசமயம் இது வல்ல. எனினும் புத்த மத விழாவிற் கலந்து கொள்வதற்குப் பாரதப் பிரதமரின் வருகை வேண்டப்படுமாயின் அன்னாருடன் அரசியல் ஆலோசனைகள் செய்வது அழகாகாது. அன்றியும் இத்தேச மக்கள் யாவரும் மொழி இனம் மதம் என்ற வித்தியாசம் இன்றி விருந்தினரை வரவேற்பது வேண்டத் தக்கது. அவ்வுபசாரமும் கொழும்புமா நகரிலேயே யமைதல் விரும்பத் தக்கது இல்லையேல் அப் பெரியார் தமிழகத்தையும் பார்வையிடுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படுதல் வேண்டும்.

## வாழ்க்கை வானில்

— வளர்மதி

### அமைச்சரின் ஆட்படை

புயபலத்தாற்பொலிவால் பன்மொழித் தேர்ச்சியாற் பல்வேறு பாகுபாடுகள் அமைந்திருக்கும்மந்திரியார் மரிக்கார் சுற்றுலாச் செல்கின்றார். பரிவாரமாகப் பலர்போகவேண்டுமென்று பகிரங்கப்படுத்தி விட்டார். இதற்கிடையிற் பிரதமர் பத்திரிகையாளரின் எழுதுகோலுக்குப் பயந்தவர்போலக் காட்டி மந்திரி மரிக்காரின் பரிவார ஆட்பலத்தைக் குறைக்கும்படி வேண்டினார். ஆனாற் பிரதமரின் குறிப்புக்கு மறுத்து விட்டார் மரிக்கார். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வதை நன்கறிந்த மந்திரி மரக்கார் உலகத்தில் உள்ளபடி என்ன நடைபெறுகின்றதென்பதைத் தான் மட்டுமல்ல (நான் பெற்ற இன்பம் பெறுகஎன் அமைச்சு அலுவலாளர்கள்) என்ற முறையில் முடிவு செய்திருக்கின்றார்.

### இவர்கள் எல்லாரும் ஏககாலத்திற் போகலாமே!

ம. ஐ. முன்னணி மந்திரி சபை அப்படியே உலகத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு வரப்படாதா? ஒரு அளவுக்கு இந்நாட்டு மக்களுக்கு ஆறுதலாய் இருக்குமல்லவா? ஐ. தே. கட்சி அவனியை அளந்தது, ஆட்சியைத் துறந்தது ம. ஐ. முன்னணியும் மாநிலத்தை வலம் வந்து விட்டால்அரசு நடத்தும் அவாவை மறந்து விடலாம்!

இதற்கிடையே அநுரத புரித் திறப்புவிழாவிற்கு நேருப்பெரியாரை அழைத்தல் ஒண்ணாதென வெளியிடுவது விருந்தினருக்கு அபசாரஞ் செய்வதை ஒக்கும். அழையா விருந்தில் நுழையும் அரசியற்றலைவராக நேருப் பெரியாரை மக்கள் ஐக்கிய முன்னணியார் நினைத்துவிடுதல் கூடாது. இலங்கை வாழ் இந்தியர்களிற் பெரும்பாலோர் தமிழ்பேசும் மக்கள் ஆவர். தமிழ் மொழியை அரிஆசனத்திலிருந்து அகற்றித் தனிச் சிங்களச் சட்டம் வகுத்த மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தாருக்கு இலங்கை வாழ் இந்தியர்களில் எவ்வாற்றானும் அநுதாபம் இருக்கமாட்டாது. எனவே நேருப் பெரியாரை வாருங்கள் வாருங்கள் என்று இந்த வேளையிலே இவர்கள் கூவிஅழைப்பது உள் ஒன்று வைத்துப் புறம் பொன்று காட்டும் வகையிலுள்ள சூழ்ச்சியாகும். அவ்விதமாகச் சூழ்ச்சி செய்யும் பொழுதும் விருந்தினர் அநுரதபுரித திறப்பு விழாவை ஆரம்பித்து வைப்பதைச சிங்கள மக்கள் விரும்பவில்லை என்று அபசார மொழி பேசுவது எத்துணை இறுமாப்பு!

இந்நாட்டு ஆட்சியாளர் தமிழ் பேசும் மக்களிடம் நடந்து கொள்வது போல உலக உத்தமர் நேரு அவர்களுடனும் 'விலாங்கு' மனப்பான்மையுடன் அளவளாவ எண்ணியிருப்பதை இலங்கைவாழ் இந்திய மக்கள் நன்குணர்ந்து அரசியல் நெருக்கடியும் அமைதியின்மையுமுள்ள இக்காலத்தில் நேருப் பெரியார் இங்கு விருந்தினராக வருவது நன்றாகாதென்று பாரத மக்களுக்கு எடுத்துக் காட்டுதல் வேண்டும். அநுரதபுரிப் புனருத்தாரண விழாவிற்குப் [illegible]மில்லாதவரா — [illegible] பெரியார்.........?

### முன்னணியின் முதல் இல்லா வியாபாரம்

வாளைச்சேனைக் காகித உற்பத்திச் சாலையை நடத்துவதற்குப் பண்டாரநாயக ஆட்சியாளருக்குக் கையிற் பணமில்லையாம்! சுற்றுலாவுக்குக் கோடிக்கணக்காகச் செலவு செய்தாற் கையிற் கடிக்கும் என்பது மெய்யே. உபகரணங்கள் வந்துவிட்டன, இரசாயனப்பொருட்கள் இறக்குமதியாய் விட்டன. ஆனால் இயந்திரம் இயங்க முடியாமல் இருக்கின்றது. தமிழகத்தின் தலைவிதியா?

---

### உதவிபெறும் மதச் சார்புப் பாடசாலைகள் இனிமேல் இல்லையாம்

அற்சாங்கத்திடம் உதவி நன்கொடை பெறும் மதச் சார்புள்ள பாடசாலைகள் 8-5-57 ன் பின் அனுமதிக்கப்படமாட்டா என்று கல்வி நிதி அமைச்சுக்களுடன் ஆலோசனை செய்த பின்பு முதல் மந்திரி தீர்மானித்துள்ளனராம்.

---

### மொழி அலுவலகத்தில் தமிழ் அலுவலர் நிலைமை

அரசாங்கமொழி அலுவலகத்தில் தமிழ் அலுவலர் நிலைமை மிக வருத்தந்தருவதொன்றாயுள்ளதாம். நியாயமான அளவு தமிழ்மொழி உபயோகிக்கும் உறுதி மொழிகள் வெளிவந்தபடியிருக்க, அப்பகுதி உணவு நிலையத்தில் உணவு விபரங்கள் சிங்களத்தில மாத்திரம் வெளியிடப்பட்டுள்ளனவாம். சிங்களம் தெரியாத அலுவலர்களுககு இது இடைஞ்சலுண்டாக்குவதொன்றாகலின உணவு விபரங்களைத் தமிழிலும் வெளியிடும்படி தமிழ் உத்தியோகத்தர் கேட்டனர். ஆனால் அவர்களுடைய கேள்வி செவிசாய்க்கப்படவில்லை. அதனால் குறித்த [illegible]

## உயர்திரு. மறை திருநாவுக்கரசு அவர்கள் வருகை

சைவத்தின் சிகரமென்றழைக்கப்பெற்ற பேராசிரியர் உயர்திரு. மறைமலையடிகளாரின் மூத்த புதல்வரும் தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரித் தமிழ்ப் பேராசிரியருமாகிய சித்தாந்த தினகரன் திரு. மறை. திருநாவுக்கரசு அவர்கள் இம் மாதம் 18-ம், 19-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் சொற்பொழிவாற்றுவார்கள். விபரங்கள் அறிய விரும்புவோரும் சொற்பொழிகள் ஒழுங்கு செய்ய விரும்புவோரும் திரு. கந்தசாமி அவர்களிடமும் (கந்த விலாஸ் மானிப்பாய்) திரு. சி. செ. சோமசுந்தரம் அவர்களிடமும் (411 கே. கே. எஸ். வீதி, வண்ணார்பண்ணை) அறியலாம்.

— கடித.

# அகில இலங்கைத் தமிழ்மறைத்தேர்வு

## பரிசில்கள் பெறுவோர்

தமிழ்மறைக்கழகம் சென்ற பங்குனி (மார்ச்) மாதம் நடத்திய அகிலஇலங்கைத் தமிழ்மறைத் தேர்வுக்குத்தோற்றியவர்களுள் பின்வருவோர் பரிசில்கள் பெறுகின்றனர். இப்பரிசில்கள் யாவும் கொழும்பில் நடைபெறும் ஐந்தாவது திருக்குறள் மாநாட்டிலே ஆனி (யூன்) மாதம் 11-ஆம் தேதி வழங்கப்படும்.

பதக்கப் பரிசில்கள்

(முதலாம் இரண்டாம் பரிசில்களுக்குத் தங்கப் பதங்கங்கள் ஏனையவற்றுக்கு வெள்ளிப் பதக்கங்கள்).

மேற்பிரிவு

முதலாம் பரிசில்:
திரு. வ. சிவசாமி, இறக்குவானை
இரண்டாம் பரிசில்:
செல்வி கு. சரசுவதி நெடுந்தீவு.

மத்திய பிரிவு

முதலாம் பரிசில்
செல்வன் சு. சிவபாதவிருதயர் கொழும்பு
இரண்டாம் பரிசில்
செல்வி இ. சிவபாக்கியம் தெல்லிப்பளை
மூன்றாம் பரிசில்
செலவி நா. பூரணம் நெடுந்தீவு
நான்காம் பரிசில்
செல்வன் க. கிருட்டின பிள்ளை கொழும்பு

கீழ்ப்பிரிவு

முதலாம் பரிசில்
செல்வி சு. கௌசலா அளவெட்டி
இரண்டாம் பரிசில்
செல்வன் பொ. கந்தசாமி சாவகச்சேரி
மூன்றாம் பரிசில்
செல்வி சு. பாலகௌரி அளவெட்டி
நான்காம் பரிசில்
செலவி. கா. நவமணி சாவகச்சேரி

தொடக்கப் பிரிவு

முதலாம் பரிசில்
செல்வன் சி. சிவகுமாரன் அளவெட்டி
இரண்டாம் பரிசில்
பீ. ஞானச்சந்திரன் சாவகச்சேரி
மூன்றாம் பரிசில்
செல்வன் நா. பால[illegible] காதரன் புங்குடுதீவு
நான்காம் பரிசில்
செல்வன் க. முருகையா இறக்குவானை

புத்தகப் பரிசில்கள்

(இங்கு குறிக்கப்படும் இடங்கள் தேர்வு நடந்த இடங்களாகும்)

மத்தியபிரிவு

செல்வி மு. புஷ்பமலர் அளவெட்டி
செல்வன் சி. நாகேந்திரம், நெடுந்தீவு

கீழ்ப்பிரிவு

செல்வி வி. மங்கையர்க்கரசி அளவெட்டி, செல்வன் ஆ. இராமலிங்கம் இறக்குவானை, செல்வன் அ. ஹ. உம்முகுலதூம் கண்டி, செல்வன் சு. தங்கராசா கரவெட்டி, செல்வி பொ. பரமேஸ்வரி கிளிநொச்சி, செல்வி கி பாலயோகினிகொழும்பு,செல்வி ஆ. மனோன்மணி சாவகச்சேரி, செல்வி கா.புவனேஸ்வரி பன்வில, செல்வன் இ. அரசரத்தினம் முள்ளியவளை, செல்வன் சு. மோகனசுந்தரம் வதுளை, செல்வி க. லோகேஸ்வரி காரைநகர்.

தொடக்கப்பிரிவு:—செல்வன் அ. கணேசமூர்த்தி அளவெட்டி, செல்வன் பெ. ஆறுமுகம் இறக்குவானை, செல்வி சி. திலகவதி கிளிநொச்சி,செல்வி ஸ்ரீ இராஜலட்சுமி கொழும்பு, செல்வன் க. சாந்தசொரூபன் நாவலப்பிட்டி; செல்வன் நா. பரமநாதன் நீர்வேலி, செல்வி க. பரமேசுவரிமுள்ளியவளை, செல்வன் சு. திவ்வியநாதன் யாழ்ப்பாணம், செல்வன் சி. செல்வராசா வேலணை.

மிககுறைந்த வயதுடையவருககுரிய பரிசில் செல்வன் க. சாந்தசொரூபன் நாவலப்பிட்டி.

மிகத் தொகையான மாணக்கர்களைத் தேர்வுக்குத் தோற்றச்செய்து பாராட்டுப் பத்திரம் பெறும் பாடசாலைகள்:

1 மத்திய பிரிவு: அரசினர் கனிஷ்ட பாடசாலை நெடுந்தீவு.

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களே எதிர்காலச் சிற்பிகள்

## ஆக்க வேலைகளில் ஊக்கமாகப் பங்குபற்றுதல் அன்னவர் கடன்

### சமஉரிமையும் சமசந்தர்ப்பமும் அவர்களின் உடைமை

"மங்கையராகப் பிறப்ப
தற்கே நல்ல
மாதவஞ் செய்திட
வேண்டுமம்மா"

என்று மங்கையர் பிறப்பிற்கு உயர்ச்சி கொடுத்து உணர்வூட்டினர் தாழ்ந்த, அடிமைத்தளை பூண்ட சமுகத்தைத் தட்டியெழுப்பி மக்களிடையே மறுமசிர்ச்சியை உணர்ச்சியோடுட்டிய நம் புரட்சிக் கவிஞன் பாரதியார்.

ஆனால் இன்று பெண்ணினம் இழிமைப்பட்டுவிட்டது. உரிமை குறைக்கப் பட்டுவிட்டது. ஒதுக்கப் பட்டுவிட்டது. காரணம் பெண்ணினம் தேவையற்றவைகளில் போலிகளில் தங்கள் சக்திகளை உரிமைகளை உபயோகிப்பதே. பெண் என்பது சக்தியின் வடிவம். பிரதிபிம்பம். சத்தியென்பது வல்லமை. வல்லமையின்றேல் ஒன்றுஞ் செய்ய இயலாது. சக்தியே எல்லாத் தோற்ற ஒடுக்கங்கட்கும் முழுமுதற்காரணம். சக்தியின்றிச் சிவமின்று. சிவமின்றிச் சக்தியின்று என்கின்றது நம் சைவ சமய நூல். ஆண் பெண் உரிமையும் உயர்ச்சியும் ஒன்றிலிருந்தொன்று பிரிக்க முடியாத முழுமை இதிலிந்து புலப்படுகின்றது. பெண்கள் தங்கள் உரிமைகளையும் உயர்ச்சியையும் உண்மை வழியில் நின்று உபயோகியாமையே இன்றைய நிலைக்கு ஏதுவாகும். வீட்டிலன்றி, நாட்டில், சமூகத்தில் அரசியலில் ஒவ்வொன்றிலும் உழைப்பதற்குப் பெண்களுக்கும் உரிமையுண்டு. உரிமை கொடுக்கப்படவேண்டும். வெளியுலகில் நடமாடவிட்டால் பெண்கள் நெறி தவறிவிடுவர்; இகழப்படுவர் என்று சிலர் காரணங் கூறலாம். அதிலும் ஒரு அளவு உண்மையுண்டு தான். அதற்கும் காரணம் பெண்கள்தான். அவர்களிலுள்ள தற் குறைவு தான் மற்றையோரப்படிப் பேசுவதற்குங் காரணம். ஒவ்வொருவரும் நிறையெனும் வரம்பில தம் இதயத்தைக் கட்டுப்படுததிச் சன்மார்க்கத்தைக் கடைப்பிடித்துச் சீரிய வழிகளில் தங்கள் சக்திகளைச் செலுத்தி மக்கட்குப் பிரயோசனமான வழிகளில் முயற்சிகளைப் புரிவார்களானல் ஒருவராலும் பெண்கள் ஒதுக்கப்படவும், இகழப்படவும் வேண்டிய நிலை ஏற்படாது. பெண்கட்குக்கூடிய பொறுப்புரிமை உண்டு. ஆத்மசக்தி அன்பு, அறிவு முதலியவை யுடைய பெண்கள் பலர் தோன்றவேண்டும்.

"மாவும் மாக்களும் ஐயறிவுயிரே
மக்கள் தாமே ஆறறிவுயிரே"

என்றார் ஆசிரியர் தொல்காப்பியர். பகுத்தறிவுள்ள மக்களை மக்களென்றும் அவ்வறிவற்ற மக்களை மக்கள் வரிசையில் வையாது

.................................................

செல்வி த. மாலோகமணி

.................................................

விலங்குகள் வரிசையில் வைத்தார். எப்பிறவியிலுமரிதாய்க் கிடைத்தற்கரிய மக்கட் பிறவியெடுத்தும் பகுத்தறிந்து, உண்மையை நாடி உண்மைவழிச் செல்லாத மக்கள் மக்கட்பிறவியெடுத்தும் பிரயோசனமில்லை. பகுத்தறிவில்லா மக்களால் இன்றைய சமுகத்தில் அநேக இளைஞர்களின் வாழ்க்கை அல்லற்பட்டு அலைந்து போவதுடன் எந்நேரமும் கொந்தளிப்பு நிறைந்ததாகக் காணப்படுகின்றது. மக்கள் இதயத்தில் ஆசை, சுயநலம் சர்வாதிகாரம் என்பன கோர நடம் புரிகின்றன. இவர்கள் உண்மை வழியை நாடுவதெங்ஙனம்? ஏனையோர்க்கு உண்மை வழியைப் போதிப்பதெங்ஙனம்? பிறர் நலமென்ற மேற் போர்வையுடன் சுயநலத்தையும் அதிகாரத்தையுமடிப்படைக் குறிக்கோளாகக் கொண்ட

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# அணிந்துரை அரங்கம்

## திருக்கேதீஸ்வர வெளியீடுகள்

தொகுத்துத் திருத்திப் பதிப்பித்தவர் சேர். கந்தையா வைத்தியநாதன்.

பிரதி ஒன்று விலை ருபா 2.

திருக்கேதீச்சரத் தலம் தேவாரகாலப் பழைமை வாய்ந்தது. நாயன்மாராற் பாடிப்போற்றப் பெற்றது. அருள் நனி வழங்குந்தலமாய் விளங்குவது. இத்தகைய திருத்தலத்தைப்பற்றிச் சைவமக்கள்பலர் அறியாதகாலமுமிருந்தது. அறிந்தும் அத்தலத்துக்குச் சென்று தரிசனஞ் செய்து அருள்பெற்றுய்யும் வழி காணுதார் இன்றும் பலர் இருக்கின்றனர்.

நிலைமை இவ்வாறமைதலால், இப் புராதன தலத்தின் பெருமையைச் சைவமக்கள்யாவரும் அறிந்து தரிசனஞ் செய்து திருப்பணிகளிற் பங்குபற்றி இன்புறுதற்கு உதவும் ஆசையால் உந்தப்பெற்று இதுபற்றிய பல உண்மைகளைத் தொகுத்துத் திருத்தி வெளியிட்டிருக்கின்றார் மேற்படி திருக்கோயிலின் திருப்பணிச்சபைத்தலைவர் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள்.

இவ்வெளியீட்டில் இத்தலத்தின் மகிமை இதுபற்றிய வரலாறு, சமயாசாரியர்கள் பாடியருளிய தேவாரங்கள், சிவபுண்ணியப் பெருமை ஆதியன திருப்பணிப் படங்களுடன் தரப்பெற்றிருக்கின்றன. இப்பிரதிகளால் வரும் பணம் திருப்பணிக்காகுமென்றும் குறிக்கப்பெற்றிருக்கின்றது. இவ்வெளியீட்டுப் பிரதிகளைப் பெற்றுப் படித்தும் திருத்தல யாத்திரை செய்தும் இத் திருப்பணிகளில் இயன்றளவு பங்குபற்றியும் சைவமக்கள் இன்புறுவார்களாக.

# மாணக்கர் மதிவள மன்றம்

"தமிழ் வேள்"

## பெரியபுராண வசனம்

### திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராணம் 1

இன்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரைப் பற்றிப் படிக்கப்போகின்ரேும். இப்போது முதலில் இரண்டு செய்யுட்களை வாசிக்கின்றேன். கவனித்துக் கேளுங்கள். முதலாவது செய்யுள்.

"காழிநகர்ச்சிவபாத விதயர் தந்த
கவுணியர்கோ னமுதுமையாள் கருதியூட்டும்
ஏழிசையினமுதுண்டு தாளம்
வாங்கி யிலங்கிய விதிலச் சிவிகையிசையவேறி
வாழுமுயலகனகற்றிப் பந்தரே [ய்ந்து
வளர்கிழிபெற் றரவின்விட மருகற்றீர்த்து
வீழிநகர்க்கசெய்தி மறைக்கதவம்
பிணித்து மீனவன் மேனியின் வெப்பு விடுவித்தாரே"

"ஆரெரியிட் டெடுத்தவே டவை [முன்னேற்றி
ஆற்றிலிடு மேடெதிர் போ யணையவேற்றி
யோரமண ரொழியாமே கழுவி லேற்றி
யோதுதிருப் பதிகத்தா லோடமேற்றிக
காருதவு மிடிபுத்தன் தலையிலேற் றிக்
காயாத பனையின்முது கனிகளேற்றி
ஈரமிலா வங்கமுயிரெய்த வேற்றி
யிலங்குபெரு மணத்தரணை யெய்தினரே"

இவ்விரண்டு செய்யுட்களும் நாயனார் சரித்[illegible] தையுமடக்கிக் கூ[illegible] செய்யுட்கள். இதுபோலவே திருநாவுக்கரசு நாயனருக்கும், சுந்தரமூர்த்தி நாயனருக்கும் இவ்விரண்டு செய்யுட்கள் உள்ளன. அவற்றை உங்கள் ஆசிரியரிடம் கேட்டறிந்து மனனம் பண்ணிக் கொள்ளுங்கள். அவை உங்களுக்குப் பெரிதும் பயன்படும.

இப்பொழுது சம்பந்தமூர்த்தி நாயனரது பொதுக் குறிப்பு ஒன்றைத் தொகுத்து முதலிற் கூறுவேன்.

சோழநாட்டிலே யுள்ள சீர்காழியூரிலே - வைதிகப் பிராமண குலத்திலே 7-ம் நூற்றூண்டிலே சிவபாதவிருதயர் என்பவருக்கும் பகவதியார் அம்மைக்குந் திருமகனக அவதரித்தார். இவருக்குக் கௌணியர் கோன்-காழிவேந்தர் - பரசமயகோளரி-பாலறுவாயர் -ஆளுடைய பிள்ளையார் என வேறு திருநாமங்களும் வழக்கும். இவர் முதலிற் பாடிய பதிகம் "தோடுடைய செவியன்" என்பது. இறுதியிற் பாடியது "காதலாகிக் கசிந்து" என்பது. பாடியருளிய பதிகங்களின் தொகை 1600 இப்போது உள்ளவை 384. இவர் தேவாரங்கள் முதன்மூன்று திருமுறைகள் என வழங்கப்படும்.

கண்ணப்பர்-கோச்செங் கட்சோழர் - நமிநந்தி-சண்டீசர்-தண்டியடிகள் -சிறுத்தொண்டர் - புகழ்த்துணையார்—முருகர் —நெடுமாறர் [illegible] [illegible] வர்களாவர்.

தமது 16-ம் பராயத்தில் ஒரு வைகாசி மாசத்தில் மூல நட்சத்திரத்திலே அரன்பதமடைந்தார்.

**பொருகடற் பரிதிபோலப் பொன்னனுன் பிறந்தான்**

சிவபாதவிருதயர் சிவகருணை நிறைந்தவர். சிவனுடைய பாதத்தைத் தம் மிருதயத்தே கொண்டவர் சிவபாதவிருதயர். சிவகாருண்யந் திரண்டவர். மனைவியார் கற்பிலே உயர்வொப்பில்லாதவர். இருவரும் இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு வாழ்ந்தனர். தமிழ் நாட்டிலே ஆருகத சமயம் பெருகிச் சைவசமயம் அருகுதலைக் கண்டார் சிவபாதவிருதயர். அதனல் மிகுந்த கவலை கொண்டார். தோணியப்பரையும் பெரிய நாயகியையும் தோத்திரஞ் செய்தார். சைவம் வளரத் தம் தமிழ் நன்கு தழைக்கத் தமிழ் ஓங்கத் தக்கவொரு சற்புத்திரரைத் தருமாறு வேண்டினர். உலகம் உவப்பத் தமிழ் தழைக்கத் தமிழ்நாடு தழைக்கச் சைவம் சிறக்க சைவத்தை உய்விக்க-ஞானசூரியன் என்னப் பிறந்தார்சம்பந்தப்பிள்ளை.

**உன் செய்கை இதுவாயின் வா!**

பிள்ளைக்கு வயதுமூன்று. சிவத்தந்தை சிவபாதவிருதயருக்குக் கொடுத்த சிவகுமரன். அந்தச் சிவகுமரனுக்கு இருந்தாற்போல ஒரு அச்சம். நினைத்தவுடன் ஒருகிளர்ச்சி. ஏதுங் குறிகள் கண்டதும் அழத் தொடங்கிவிடுவார். பூர்வ ஜென்ம வாசனைபோலும்! இங்ஙனமாகச் சிவபாத விருதயர் ஒருநாள் நீராடப் போனர். அழுதுகொண்டு பின்னுகப் போனது பிள்ளையும். திரும்பி நோக்கினர் தந்தை. அந்தப் பார்வை - வராதே நில்; என்றமாதிரி இருந்தது. பிள்ளை காலைத் தூக்கி - நிலத்திலே மிதித்துத் - தந்தை விருப்பை - விரும்பாமை காட்டியது. "உன் செய்கை இதுவாயின் வா" என்று விட்டுப்போனர். பிள்ளையும் போனது.

பிள்ளையைக் கரையில் இருத்திவிட்டுத் தீர்த்தமாடினர் சிவபாதவிருதயர். தலை நீருள் மறைந்தது. பிள்ளை பார்த்தது. காணவில்லை ஆளை. முற்றொடர்பும் - முன்னுணர்ச்சியும் மூண்டது. திருத்தோணிச் சிகரத்தைப் பார்த்து "அம்மே! அப்பா!" என்று சும்மா அழுதது பிள்ளை. முன் தொண்டுகளை யுணர்ந்த இறைவன் பார்வதியுடன் சென்று பாலூட்டப் பண்ணினர்.

பார்வதியார் பொன் வள்ளத்தில் திருமுலைப்பாலைக் கறந்தார். சிவஞானத்தைக் குழைத்தார். ஊட்டினர். சிவன் அநுக்கிரகஞ் செய்தருளினர். பிள்ளை இருவராலும் ஆளப்பட்டது. ஆளுடைய பிள்ளையார் ஆனர். சிவஞானத்தோடு சம்பந்தஞ் செய்தமையின் திருஞானசம்பந்த மூர்த்தியுமானர்.

**யார் தந்த பாலை உண்டாய் நீ!**

இங்ஙனமாக, நீராடி வந்து பார்த்தார் சிவபாத விருதயர். பிள்ளையின் வாயிலே பால்வடிந்து கிடந்தது. "யார் தந்த பாலை

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள்

## கலைக்கருவூலங்களாய்க் கருத்தைக் கவரும் திருவுருவங்களாயின

"தமிழ்நாட்டுக் கோவில்கள் கலைக் கருவூலங்கள்" அழகின் இருப்பிடங்கள்; வெளி நாட்டின் கருத்தைக் கவரும் வண்ண ஓவிய அற்புதத் திருவுருவங்கள். இத்தகைய பெறுதற்கரிய பெருங்கலைச் செல்வங்களைப் பெற்றதற்கு உண்மையிலேயே நாம் பெருமைப்படவேண்டும். நமது கோவில்களில் நான் ஆழ்ந்த நம்பிக்கை வைத்திருக்கின்றேன். அவைகள் நின்று நிலைபெற்று, வளர்ந்து வளம்பெறவேசெய்யும் என்பது உறுதி.

கோவில் கல்வெட்டுகள் தென்னாட்டுக் கோவில்களின் தனிச் சிறப்பாகும். இத்தகைய கல்வெட்டுக்களை கோவில்களுக்குள் வைக்க வேண்டும் என்ற தருமபுர மடப் பண்டார சன்னதிகளின் கருத்தை வரவேற்கின்றேன். கோவில்களுக்கு வழிபடச் செல்பவர்கள் இக்கல்வெட்டுகளில் உள்ள கவிதைகளைப் படித்து அவற்றின் கருப்பொருளை உணர்ந்து, மனத்தூய்மை பெற்று, அறிவொளி எய்தி வெளிவருவார்கள். தேவாரங்களையும் திருப்பதிகங்களையும் படித்து விட்டால் மட்டும் போதாது. அவைகளின் உட்கிடக்கையை உணரவேண்டும். அவற்றை நம் வாழ்க்கையில் நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டும்.

வழிபாட்டு முறைகள், அருச்சனை செய்யும் மொழிகள் சம்பந்தமாக எழுந்துள்ள வேறுபாடுகளினால் சச்சரவுகளையும் தகராறுகளையும் சமயத்திலும் புகுத்தி விட்டார்கள். சமயம் இத்தகைய தகராறுகளுக்கு அப்பாற்பட்டது. அருச்சனை என்பது கடவுளின் பெயரைத் திரும்பத் திரும்பக் கூறுவதுதான். தமிழில் அருச்சனை செய்ய வேண்டுமென விரும்புபவர்கள் தங்கள்விருப்பப்படியே செய்து கொள்ளலாம். ஆனால் இதை ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினையாக்கி விடக்கூடாது என்று திருக்கடலூர் குடமுழுக்கு விழாத் தொடர்பிற் பேசும் போது அமைச்சர் ஸ்ரீ எம். பக்தவத்சலம் கூறினர்.

# சிவஞான மாபாடியம் தந்த செம்மல்

முதலாம்பக்கத் தொடர்ச்சி

செய்து சென்றருள வேண்டும் எனப் பிரார்த்தித்தார். அப்படியே முனிவர்கள் இளைஞரின் வழிபாட்டிற்கு இரங்கி விரும்பி உடன்பட்டனர். உடன்பட்ட அவ்வடியவர்கள் முக்களாலிங்கர் பிறகே போயினர். முக்களாலிங்கரின் அருமைக் கருத்தையுணர்ந்து அருந்ததியினும் சிறந்த மயிலம்மையார் முனிவர்களைத் திருவமுது செய்வித்து உபசரித்தனர்.

முக்களாலிங்கர் தமது கருத்தின்படி அடியார்களை உபசரித்ததாயாரைப் பின்வருமாறு பாராட்டி ஒரு வெண்பாக் கூறி மகிழ்வித்தார். அஃது,

"அருந்ததி என்னம்மை
அடியவர்கட் கென்றும்
திருந்த அமுதளிக்கும்
செல்வி—பொருந்தவே
ஆனந்தக் கூத்தர்
அகமகிழத் தொண்டு
செயும்
மானந்தவாதமயில்"

என்பது.

புறத்தேபோயிருந்த ஆனந்தக் கூத்தர் வீட்டிற்கு வந்தனர். நிகழ்ந்த அற்புதச் செய்திகளைக் கேட்டார். பேரின்பக் கடலிலே மூழ்கினர். ஆதீன முனிவர்களை வணங்கினர். முக்களாலிங்கரும் அம்முனிவர் பெருமக்களோடு செல்ல வேண்டும் என்னும் குறிப்பைத் தந்தையாருக்கு உணர்த்தினர். புத்திரரைப் பிரியத் தந்தைக்கு மனமில்லை. பின் ஒருவாறு இசைந்தார்.

முக்களாலிங்கர் முனிவர்களோடு வழிக்கொண்டார். பல சிவதலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவாவடுதுறை மடம் சேர்ந்தார். உள்ளத்துறவு பூண்டு மெய்யுணர்வும் பெற்றார். இவர் ஆதீன முதற்குரவராகிய குரு நமச்சிவாய தேசிக மூர்த்திகளைத் தரிசித்து அருளேக்கம் பெற்றனர். பின் ஒடுக்கத்திலிருந்த வேலப்ப தேசிக சுவாமிகளைத் தரிசித்தனர். அதன் பின் ஞானதேசிகரிடத்தில் சிவ தீக்கையும், சைவசந்நியாசமும் சிவஞான சுவாமிகள் என்னும் தீக்ஷாநாமமும் பெற்றனர். பின்னர் தென்மொழிக் கடலையும், வடமொழிக்கடலையும் நிலை கண்டுணர்ந்த மாதவ யோகிகளாயினர். பிறர் கருத்தைத் தர்க்கித்துத் தமது கொள்கையை நிலைநாட்டும் உத்தம வீரர். மகா கல்விமான். வைதீக சைவநெறி மரபு ஒழுக்கம் தவறாத பெருந்தகையாளர்! "காஞ்சி புராணம். சிவஞானபோத மாபாடியம், பல அந்தாதிகள், செய்யுட்கள், கண்டன நூல்கள், உரை நூல்கள், பிள்ளைத்தமிழ், ஆனந்தக்களிப்பு முதலிய நூல்களைப் பாட்டாலும், உரையாலும் ஆக்கித் தமிழ்வளர்த்த அருள் வள்ளலார். தமிழ்மொழிக்கண் பாடியம் எனப்படும் பேருரை இல்லை என்ற குறையை நீக்குமாற்றான் சிவஞான மாபாடியம் என்னும் உயர்ஞானப் பேருரைநூலைச் செந்தமிழில் தந்த அருட்பேராசிரியருமாவர்.

இவர் காஞ்சிபுரத்துக்கு அடிக்கடி செல்வார். அங்கே தவத்தில்இருப்பார். தவத்திலிருந்தே காஞ்சிப் புராணத்தை யாத்தருளினர். அங்கு இவருக்குப் பல மாணவர்களும் உளர். ஆதீனத்துக்கு ஒரு வித்துவானுக இருந்தவர்கள். இவ்வருளாளர் தம் வாழ்க்கையின் பயனுகச் சைவ உலகத்துக்குத் தந்த கருவூலம் சிவஞான மாபாடியமாகும். இது மெய்கண்ட தேவர் அருளிச்செய்த சிவஞான போதம் என்னும் முதல் நூலின் பேருரை. தமிழ் மொழிக்கண் சிவஞான பாடியம் ஒன்றே பாடியமாக அமைந்திருத்தலால் இது திராவிடமாபாடியம் எனச் சிறப்பித்துக் கூறப்பெறும். மலையாதருளும் முனிவர் சிகாமணியாகிய ஸ்ரீலஸ்ரீ சிவஞானசுவாமிகளைப் பற்றிப் பல கர்ண பரம்பரைக் கதைகளும் உண்டு. சுவாமிகள் துயிலும் பொழுது வலதுபக்கத்தில் பெரியபுராணத்தையும், இடது பக்கத்தில் கந்தபுராணத்தையும், நெஞ்சில் திருவாசகத்தையும் வைத்துத்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# ஆனந்த விகடன் ஆசிரியர் மறைவு

ஆனந்தவிகடன் ஆசிரியர் திரு. ஆர். மகாதேவன் அவர்கள் இவ்வுலகை விட்டுத் தமது 44-ம் வயதில் அகாலமாக மறைந்தார் என்று ஓர் துக்க செய்தி வெளிவந்துள்ளது. தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராகிய இவருடைய பிரிவு எழுத்தாளர் உலகிற்பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியது.

—0—

# மாணக்கர் மதிவள மன்றம்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

உண்டாய் நீ" என்று கோபித்தார். "தந்தவரைக் காட்டு" என்று ஒரு இளங் கம்பால் அடித்தார். உச்சி மேலாக எடுத்த - ஒருகை விரலால் - ஆகாயத்தைக் காட்டி - உள்ளெழுந்த - எல்லையற்ற - உந்தலினல் "தோடுடைய செவியன்" என்று பாடினது பிள்ளை. இறைவன் பார்வதியோடு காட்சி கொடுத்து எழுந்தருளினர் திருத்தோணிக்கு. திருத்தோணிபுரம் என்பது ஒருதலம். கண் பார்க்க– உள்ளம் இழுக்கத்– தொடர்ந்தார் சம்பந்தரும். புண்ணியம் புரிந்த பிதாவும் பின்னலே போனர் ஆனந்தக் கூத்தாடிக்கொண்டு. பிள்ளை தமிழ்மழை பொழிந்தது. அறிந்தார் சிவபாதர் தமிழின் அருமையை. பிராமணர்களும் பிறரும் அற்புதம்! அதிசயம்! என்றனர். சிவனடியார் தோத்திரம் பண்ணினர். பின்னர்ச் சிவபாதவிருதயர் பிள்ளையைக் கொண்டு இல்லஞ் சேர்ந்தார் மூன்றுவயதிலே தேவாரம் பாடினது செல்வக் குழந்தை.

(வளரும்)

# பெண்களே எதிர்காலச் சிற்பிகள்

3-ம் பக்கத் தொடர்ச்சி

தன்னய வஞ்சகர்களாகிய இவர்களின் சொற்களை யார்தான் கேட்டு நடப்பர்? மக்கள் கொந்தளிப்பற்று அமைதியுடனும் ஆனந்தமாகவும்வாழ்ந்து இம்மைப் பயனை யடைந்து மறுமைப் பயனையுமடையுமாறு மக்கட்கு அறிவூட்டப் பெண்மணிகள் தளராது உழைக்க வேண்டும். உழைக்க முன் வரவேண்டும். இக்கொள்கையே பகுத்தறிவைப் படைத்த பெண்களின் இலட்ஷியமாக அமைய வேண்டும்.

சங்ககாலம், சங்கம் மருவிய காலங்களில் எத்தனையோ பெண்கள் அரசியல், கலை முதலிய பல்வகையான சமுக ஆக்கநிலையங்களில் உறுதியுடனுழைத்தனர். வெற்றியுங் கண்டனரென்று நம் தமிழ் இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. அவர்களின் பரம்பரையில் வந்த இன்றைய பெண்கள் அந்நிலைகளை வகுத்துச் சமுகநலனுக்கு ஆதரவளிக்க ஏன் தயங்க வேண்டும். மக்கள் நிலையுயர உண்மையான சீரிய வாழ்வை அவர்கள் மேற்கொள்ள வீட்டிற்கொரு சீதை, நாட்டிற்கொரு கண்ணகி, சமுகத்திற்கொரு பாஞ்சாலி தேசத்திற்கொரு கிருஷ்ணபாய் உருவாக வேண்டும். அன்னவரின் ஒளியின், பிரகாசத்தால் கெட்ட சக்திகள் பொசுங்கிச் சாம்பலாக வேண்டும். உள்ளம் உணர்ச்சி கொள்ள வேண்டும். அறிவிருந்தால்மட்டும் போதாது ஒவ்வொரு பெண்களும் பண்பாடு செறிந்தவர்களாகவும் மிளிர வேண்டும்.

பெண்ணுக்கு உரிமையளிக்காத எந்த நாடும், சமுகமும்ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது. பெண்களின்நிலையை உயர்த்துவதில் அண்ணல் காந்தியடிகள் செய்த தொண்டு ஒப்பற்றது. அவர் பெண்கட்குச் சிறப்பும் மதிப்பும் கொடுத்துப் போற்றி வந்தார். பெண்ணினத்தைத் தாழ்த்துவது அல்லதுபுறக்கணிப்பதென்றல் நாட்டின் வாழ்வின் ஒரு பாதியைக் கெடுத்துப் பாழ்படுத்துவது என்றும் அது ஓர் உடம்பில் ஒரு பக்கத்துக்கை காலை ஒடுக்கி, முடக்கும் பாரிச வாயு போன்ற நோய்நிலையென்றும்1917ம் ஆண்டிலேயே ஒரு மகாநாட்டில் தம் கருத்தை அவர் திடமாகக் கூறியுள்ளார். பெண்ணினம் பெருமையுடையது. மக்களின் இகபர சுக வாழ்க்கைக்குப் பெண்களே பொறுப்பாளிகளும், முக்கியமானவர்களுமாக இருந்து ஆண்களுடன் ஒற்றுமை பூண்டுழைத்து உயரிய வருங்கால மக்கட் சமுதாயத்தின் நற்சிற்பிகளாகத் திகழ வேண்டும்.

# சிங்கப்பூர், ஸ்ரீ செண்பகவிநாயகர் ஆலய பரிபாலன அறிக்கை

## திருப்பணியுடன் மகா கும்பாபிடேகம் முதலிய நிகழ்ச்சிகள்

சிங்கப்பூர் ஸ்ரீ செண்பக விநாயகர் ஆலய பரிபாலன சபையாரின் அறிக்கை மகிழ்வுக்குரிய செய்திகளை அறியத் தருகின்றது. குறித்த ஆலயம் சென்ற மகாயுத்தகாலத்திற்சிதைக்கப்பட்டிருந்தது. அதைத் திருத்துதற்குப் பெருந்தொகைப் பணம் தேவைப்படுதல் கண்டு பணம் சேர்க்கும் இயக்கமொன்று வைத்திய கலாநிதி மு. தில்லைநாதன் அவர்கள் தலைமையில் தொடங்கியது. அது தொடங்கியதும் வைத்திய கலாநிதி அ. அருளானந்தம் அவர்கள் தாமாகவே முன் சென்று ஈராயிரம் வெள்ளி உதவினர். இயக்கத்துக்கு ஊக்கம் உண்டாயிற்று.

மகா கும்பாபிடேகம் நடைபெற்று அதைத் தொடர்ந்து நாள்தோறும் அபிடேகங்கள் நடைபெற்று மண்டலாபிடேகமும் நன்கு செய்யப்பெற்றது. மகா கும்பாபிடேகம் நடந்த நாள் தொடங்கி வெள்ளிக் கிழமைதோறும் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. இவ்வாறு சிங்கப்பூர்ப் பகுதிச் சைவ மக்களின் அருள் வேட்கை நிறைவுறுதற்கு ஆவன நன்கு செய்யப்பெறுதல் சைவ மக்கள் யாவருக்கும் மகிழ்வளிப்ப தொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவனிடம் ஒப்படைத்தல் என்பது என்ன?

—:0:—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அஞ்ஞானத்தை நீக்கி இறைவனுடன் ஐக்கியப் படுத்தி ஞானத்தையும் பேரின்பத்தையும் அருளுமாறு வேண்டுவதே நாம் செய்யத்தகுந்ததாகும். எங்கள் இன்பத்துக்குப் புறவாழ்க்கையல்ல எங்கள் மனநிலைமையே காரணம் என்பதை அடியார் அறிதல் வேண்டும்.

தவிர்க்கமுடியாது நிகழவேண்டியதாயுள்ளஒன்றே இறைவன் திருவருளின் படிநிகழுகின்றது. அதைப் பொறுமையுடன் நா சகித்தல் வேண்டும். எதிர்காலத்தைப்பற்றியஅச்சத்துடன் வாழ்வது இம்மையிலே எம்மாலேயே ஆக்கப்பட்ட நரகவாழ்வாகும் துனபங்கள் தோன்றும் பொழுது பெலவீனமடைதலை விட்டு அசையா மனத்துடன் அவற்றை நாம் முன்னிடுதல் வேண்டும்.

இறைவன்பாற் சரண் புகுவதால் எங்கள் தொந்தரவுகளெல்லாம் நீங்குவதாகமாட்டா. அசையா மனத்துடன் துன்பங்களைச் சகித்தற்கு வேண்டப்படும் தைரியத்தை நாம் பெறுதல் வேண்டும். இறைவன்பால் நம்மை ஒப்புக்கொடுத்து விட்டால் அவர் எங்கள் வாழ்க்கையில் எதை எதை வரச்செய்கின்ரோ அதை அதை நாம் இன்புற்று ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். எமக்கு வரக்கூடிய மிகக் கொடிய துன்பங்கள் நாம் பெறக்கூடிய மிகப் பெரும் நன்மைகளை யுடையவையாயிருக்கும். இறைவனுக்கு அடியானுவது எமக்கு வரக்கூடிய எல்லையற்ற துன்பமான நிலைமைகளில் வெற்றியீட்டுவதாகும். ஓர் அடியானுக்கு உலகப் பொருளும் புகழும் மேலானவையல்ல. உலகத்திலிருந்து எவ்வளவுக்குக் கூடுதலாக ஒரு அடியார் உதை வாங்குகின்ரோ அவ்வளவுக்கு அவர் திட நம்பிக்கையும் தூய்மையுமுடையவராகின்ரர்.

(ஸ்ரீ சுவாமி இராமதாசர் அவர்கள் எழுதிய கடிதமொன்றின் பொழிப்பு)

## காணி விற்பனவு

—

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம் கல்லூரி (பழைய வைத்தியசாலை) எதிரேயுள்ள $4\frac{3}{4}$ பரப்பு நிலமும், 6 அறைகள் உள்ள வீடும் விற்பனைக்கு இருக்கிறது. நல்ல விலைக்கோரிக்கை கவனிக்கப்படும், சி. வீரசிங்கம், 20 டுப்ளிக்கேஷன் ரோட், கொள்பிட்டி.

M 9 26-4, 3-5, 10-5

# அடைவு நகை விற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் அடைவுபிடிக்கும் காரைநகர் வடக்கு வலந்தலை வீ. வேலுப்பிள்ளை அவர்களின் அடைவுகடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மீட்கப்படாது இருக்கும் இதன்கீழ் விபரிக்கப்படும் நகைகள் 1957ம் ஆ வைகாசி மீ 27-ந் திகதி 9 மணி தொடக்கம் என்னுற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| இல | திகதி | கொடுத்த ரூபா | ஊர் | பெயர் | நகை விபரம் |
|---|---|---|---|---|---|
| 3727 | 16-1-56 | 750-00 | காரைநகர் பலுகாடு | கந்தையா வரதராசா | இரண்டுசங்கிலியும் இரண்டு பெண்டனும் |
| 3728 | 16-1-56 | 500-00 | do | do | ஒருசோடி காப்பு ஒரு சங்கிலி கூடு (தகடில்லை) |
| 3898 | 18-2-56 | 275-00 | do | do | ஒருசோடி காப்பு ஒரு புரூச ஒரு பென்டைப் பூ |

வை. ஏரம்பமூர்த்தி
Auctioneer, Karainagar,
8—5—1957.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—:—

இல. M B 1158.
கணபதிப்பிள்ளை சோமசுந்தரம் மண்டைதீவு
வழக்காளி
வயித்திலிங்கம் கணபதிப்பிள்ளை மண்டைதீவு
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 1158 ஆம் இலக்க வளக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1957 ஆம் ஆண்டு ஆனி மாதம் 13 ஆம் திகதி (13-6-57) வியாளக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை முதல் வட்டி ரூபா 994/= உம் இதில் ரூபாய் 600/- றுக்கு 15-8-56 தொடக்கம் 15-1-56 திகதிவரைக்கும் 100 க்கு பன்னிரண்டு வீத வட்டியும் பின் தீர்வை கூட்டுத் தொகையில் இறுபடும்வரைக்கும் 100 க்கு ஐந்து வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 152-10 சதமும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லைப்பிட்டி கோவிற்பற்று மண்டைதீவு இறை "காடவராயன் குடியிருப்பு" நில. பர, ஐந்தும் பனைகளும் வடலிகளும் வேம்பும். எல்லை கிளக்கு வயித்திலிங்கம் கணபதிப்பிள்ளையின் ஆதனம், வடக்கு பொன்னையா கைம்பெண் சின்னம்மாவுக்கும் ஆறுமுகம் வேலுப்பிள்ளைக்கும் உரிய ஆதனங்கள். மேற்கு மதுரைநாயகம் கைம்பெண் கமலம்மாவுக்கும் மறுபேருக்கும் முடிக்குரிய ஆதனங்கள். தெற்கு இராமுப்பிள்ளை மனோன்மணக்குரிய ஆதனம். இதடங்கலில் சொரியலாய் 7/8 எட்டில் ஏழு பங்கும் அதற்குரியவைகளும்.

முற்பதிவு 128/25,

தா. செல்லையா
கொமிஷனர்,
No. 37, Colombogam Road,
Chundikuli, Jaffna.

M 16 10-5-57 (து 200)

## அராலி சரஸ்வதி மகாசபை

### விசேஷ பொதுக்கூட்டம்

மேற்படி பொதுக் கூட்டம் 18-5-57 சனிக்கிழமை மாலை தலைவர் திரு. வே, கந்தையா அவர்களின் தலைவாசல் மண்டபத்தில் நடைபெறும். சமுகமளிக்க வேண்டியவர்கள் யார் என்பதுபற்றியும் பிற விபரங்களும் தனியே விளம்பரஞ் செய்யப்பெற்றுள்ளன,

வே. கந்தையா
மேற்படிசபைத் தலைவர்

## அகில இலங்கைத் தமிழ்மறைத் தேர்வு

2-ம் பக்கத் தொடர்ச்சி

2 தொடக்கப்பிரிவு: தேவரையாளிச் சைவ கனிஷ்ட பாடசாலை, கரவெட்டி.

3 கிழ்ப்பிரிவு; வித்தியானந்தக் கல்லூரி முள்ளியவளை.

(அடுத்த ஆண்டுத் தேர்வுக்கு கார்த்திகை (நவம்பர்) 1-க்கு முன் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—

1, யாழ்ப்பாணம் கொட்டடி V. வயித்திலிங்கமும்
2. ஷெ பெண் இராசம்மாவும்
வழக்காளிகள்

இல. 6217

எதிராக

1. கொடிகாமம் இப்போ நல்லூர் கோயில்ரோட்டு கணபதிப்பிள்ளை நவரத்தினமும்.
2. வண்ணார்பண்ணை மேற்கு சுப்பர் தம்பிப்பிள்ளையும்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 6217ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1957 ஹூ ஆனி மீ 8 உ சனிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் அந்தகாணிகுள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 3175/-ம் இதில் ரூபா 2750 க்கு 12-12-49 திகதி தொடக்கம் 1-2-57 வரைக்கும் வருடமொன்றுக்கு 100 க்கு 12 வீத வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 218-94 இதில் ரூபா 2927-07 கொடுபட்டது.

காணி விபரம்

1. கரைச்சியைச் சேர்ந்த வெளிக்கண்டல் இறை ஆத்தான் கரைப்பிட்டி வயல் நெற்பரப்பு ஐம்பது (50) எல்லை கிழக்கு சுவாமிநாதர் சின்னத்தம்பியும் பங்காளரும் மறுபேரும் வடக்கு குமாரசாமி பெண் சரஸ்வதியும் மறுபேரும். மேற்கு சுவாமிநாதர் சின்னத்தம்பியும் பங்காளரும், தெற்கு சாளம்மையர் உலயர் கோவிலாதனம். எப்படியிருந்தும் தென் கிளக்குப் பக்கமாக அரைப் பரப்பு தரும நன்கொடை கொடுக்கப்பட்டது.

2. ஷெவெளிக்கண்டல் இறை ஆத்தான் கரைப்பிட்டி வயல் நெற்பரப்பு நாலு (4) எல்லை கிழக்கு குமாரசாமி பெண் சரஸ்வதி வடக்கு P. கந்தையாவும் பங்காளரும். மேற்கும் தெற்கும் S. சின்னத்தம்பியும் பங்காளரும் இதடங்கலிற் சொரியலாய் நாலில் ஒரு பங்கு ($\frac{1}{4}$)

ஆ. ச. கந்தையா
கொம்மிஷனர்

காரைநகர்,
6-4-57.

M. 17 10-5-57 (து 50)

## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 12—5—57 —— 18—5—57. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

புதுமுயற்சிகளுக்கு முதல் இரு நாட்களும் நல்லனவாயிருக்கும். ஆனுல் செவ்வாய் புதன் வியாழன் காலைகள் சுவனமாய்க் கழிகக வேண்டும். வாரமிகுதி ஒரு அளவுக்கு நல்லாயிருககும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

தேககசுகம் விசேட கவனம் கொடுக்கப்பட வேண்டும். கண் நோய்களுக் கிடமுண்டு. உம்முடைய சில இனததவர்களுடன் அல்லது நண்பர்களுடன் நீர் சண்டையிடவேண்டி வரும். வியாழன் பிற்பகல் வெளளி சனி கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.

அவற்றைச் சமாளிக்கப் போதிய பணம் பெறுவீரெனினும் செலவு அதிகரித்துககொண்டே போகும். வேலை கூடுதலாயிருக்கும்- நண்பர் அதிக உதவியாயிருப்பர். நீர் உம்மோடு போட்டியிடுவோரை வெல்லக்கூடியதாயிருக்கும்.

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

மிக அனுகூலமான வாரம். உம்முடைய இடைஞ்சல்கள் பல வற்றை நீர் நீக்கிக்கொள்ளலாம். தனலாபத்துககும் பகைவர் அழிவுக்கும் இடமுண்டு. உம்முடைய முயற்சிகளை முன்னேற்றுக.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்,

உம்முடையஇனத்தவர்கள் உமக்கு அதிக கோபமுண்டாக்குவர். மனத் துன்பங்களுககு மிடமுண்டு. பணத் துறையில் ஒரு நல்ல வாரம், உம்முடைய முயற்சிகள் எல்லாவற்றிலும் நீர் சித்திபெறுவீர்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

தேககசுகம் திருந்த வேண்டும். உம்முடைய சொந்தச் சிககல்களும் சில நீக்கப்படும், நண்பர் உமக்கு அதிக உதவி செய்வர். கமத்தொழில் மூலம் இலாபங்களும் நிச்சயம்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

ஒரு தளப்பமான வாரம். சுகவீனங்களுக் கிடமுண்டு. உம்முடைய பிதாவழி இனத்தவர் தொந்தரவு செய்வர். ஆனுல் பணத்துறையில் நல்ல வாரம்,

**விருட்சிகராசி** விசாகம் 4ம் பாதம் அநுஷம், கேட்டை.

தேககசுகம் இன்னமும் நல்லாயிருக்கமாட்டாது. குடும்பச் சிக்கல்கள் நீக்கப்படாது தொடர்ந்து நிற்கின்றன. புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும். ஆனுல் ஆரம்ப இடைஞ்சல்களிருக்கும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம், 1ம் பாதம்,

உத்தியோகத் துறையில் நல்ல வாரம். நீர் இடைஞ்சல்களை நீக்கக்கூடியதாயிருக்கும், ஆனுல் தேககசுகமும் குடும்பக் கருமங்களும் தொடர்ந்து தளப்பமாகவேயிருக்கின்றன.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,


தேககசுகம் விசேட கவனம் கொடுக்கப்படவேண்டும். பணத் துறையில் ஒரு அளவுக்கு நல்ல வாரம். பகைவர் அழிவும் நிச்சயம். ஆனுல் மனச்சமாதானமிருக்கமாட்டாது.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

நல்லவாரம். தனலாபம் நிச்சயம், உமக்குப் போதுமான வசதிகளும் சுகபோகங்களும் கிடைக்கும். புதுமுயற்சிகளிற் சித்தியும் நிச்சயம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

முதல் இரு நாட்களும் கவனமாய்க் கழிக்கவேண்டும். இழிமொழி பரப்புவோரைப் பற்றி எச்சரிக்கையாயிருக்கவும். வழக்குகளுக்கும் இனத்தவர்கள் மூலம் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவை** சபையின் சைவப்பிரகாச அச்சகத்திற்கு சைவசமய நூல்களிலும் தமிழிலும், பாண்டித்தியம் அடைந்தவரும், ஆங்கில அறிவுடையவருமாகிய ஒருவர் நூல் பிரசுர ஆசிரியராகத் தேவை. சபைக் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும். தராதரத்துக்கேற்ற வேதனம் கொடுக்கப்படும்.

# சிதம்பரம் கோயில்

## ஆயிரக்கால் மண்டபப் புனருத்தாரண நிதி

கீழே குறிக்கப்பட்டிருக்கும் அன்பர்கள் சிதம்பரம் கோயில் ஆயிரக்கால் மண்டபப் புனருத்தாரண நிதியின் பொருட்டு எமக்குப் பணம் அனுப்பியிருக்கின்றார்கள்.

| பெயர் | விலாசம் | ரூ. ச. |
|---|---|---|
| ந. ஏகாம்பரம் | திருக்கோயில் (கிழக்குமாகாணம்) | 20 00 |
| இ. சீவரத்தினம் | பொலிஸ்நிலையம் கொழும்பு | 2 00 |
| சு. இராமலிங்கம் | மாந்தீவு, மட்டக்கிழப்பு | 1 00 |
| ஸ்ரீமதி சி. விசாலாட்சியம்பாள் | | 5 00 |
| சி. மயில்வாகனம், | சிங்கப்பூர் பென்சனர் இணுவில்கிழக்கு | 50 00 |
| நா. விசுவலிங்கம் | நாரந்தனை, ஊர்காவற்றுறை | 20 00 |
| | | 98 00 |

1-4-57, சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம்,

இ. பொ. இராசையா
தனாதிகாரி

## இந்தியாவில்

# 35 நாள்! 6000 மைல்!!

### காசி யாத்திரையும் ஆனி உத்திர சிதம்பர தரிசனமும்

—★—

**சேது, இராமேஸ்வரம், மதுரை, திருப்பரங்குன்றம் பழனி, பங்களூர், மைசூர், மதருஸ், திருப்பதி பம்பாய், எல்லோரா, ஆக்ரா, மதுரா (பிருந்தாவனம், டெல்லி, அரித்துவாரம், லக்னோ, அயோத்தி) அலகபாத், பனாரிஸ் (காசி) காயா, கல்கத்தா, பூரி, சிதம்பரம் ஆகிய இடங்களைப் பார்த்து அங்குள்ள**

இந்துமத பழம் பெரும் கோயில்கள் — புனித தீர்த்தங்கள் —இந்திய புராதன கலைச்செல்வங்கள் — அகிலஇந்திய கலாச்சாரம் முதலியவைகளை அறிந்து வர

**கட்டண விபரம் (இருநேர தாவரபோசன வசதியுடன்)**

| | | |
|---|---|---|
| முதலாவது வகுப்பு | ரூபா | 625 - 00 |
| இரண்டாவது வகுப்பு | | 475 - 00 |
| மூன்றாவது வகுப்பு | | 350 - 00 |

**இலங்கையிலிருந்து புறப்படும் திகதி 27-5-57**

( இதுவே மலிவு டிக்கட்டின் கடைசி மாதம் )

★ **இவ்வரிய பொன்னான சந்தர்ப்பத்தைத் தவற விட்டுப் பின் துன்புறுதீர்கள்.**

குறிப்பிட்ட அளவு யாத்திரீகளுக்கே இட வசதி உண்டென்பதையும் இலங்கைப் பிரஜைகள் மட்டுமே இதில் பங்கு பற்றலாம் என்பதையும் முன்னரே அறியத் தருகின்றோம்.

☞ **பாஸ்போட்—விசா மற்றும் விபரங்களுக்கு இன்றே எம்மிடம் வாருங்கள்; அல்லது எழுதுங்கள்.**

**விவேகானந்தா டிரேட்ஸ் கோப்பரேஷன்**
மலாயா – சிங்கப்பூர் – இந்தியா பிரயாண வசதி செய்பவர்கள்

31, கே. கே. எஸ். ரோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.
( பெரியகடைச் சத்திரத்திற்கு மேற்குப் பக்கம் )

தந்தி: "சென்றவேல்" Grams "CENTRAVEL"

## திருக்கேதீச்சரம் திருவிழா

### ஓர் பிழை திருத்தம்

சென்ற இந்துசாதன இதழில் முதலாம் பக்கத்தில் திருக்கேதீச்சரம் ஆரூந் திருவிழா என்ற தலையங்கத்துடன் வெளிவந்த விஷயத்தில் குறித்த திருவிழாவுக்குப் பணவுதவி புரிந்த வட்டுக்கோட்டை திருஞான சம்பந்த வித்தியாசாலை, அராலி சைவாங்கில வித்தியாசாலை, தாவளைத் தமிழ்ப் பாடசாலை ஆகியவை குறிக்கப்படாமை பற்றி வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரிப் பண்டிதர் திரு. வி. நவரத்தினம் அவர்கள் வருத்தந் தெரிவித்துள்ளார். அத்துடன் அவருடைய பெயர் குறிக்கப்பட்டதும் வருந்தப்படுகின்றது.

## உமாபதிசிவாசாரியர் குருபூசை

நாள்: ஏவிளம்பி ஹூ சித்திரை ௴ உகூ௳ (11-5-57) சனிக்கிழமை.

இடம்: சைவபரிபாலன சபை நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள்:

இரவு 6½—7 கடவுளாராதனை

7—7½ தமிழ்மறையோதல்

ஸ்ரீமத் தி. கலியாணசுந்தரக் குருக்கள்

7½—8 பிரசங்கம்

விஷயம்:
"உமாபதி சிவாசாரியர்"

விரிவுரையாளர்
திரு. வே. சோமசுந்தரம்

சைவாபிமானிகள் யாவரும் சமூகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 10-4-57.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

இல: 11335,
துரையப்பா கந்தசாமி மானிப்பாய் தெற்கு —வழக்காளி.
எதிர்
அந்திரேசு ஐயன் கொக்குவில் மேற்கு. —எதிராளி.

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 11335-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1957 ஹூ ஆனி ௴ 12 ௳ புதன் கிழமை (12-6-57) பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தவேலத்தில் விற்கப்படும், தீர்வைத் தொகை ரூபா 1596. 1-7-54 துவக்கம் 23-8-56 வரைக்கும் ரூபாய் 1200 க்கு 12 வீத வட்டியும் கூட்டி தீர்வைத் திகதி தொடக்கம் பணங் கொடுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 276-42,

காணி விபரம்

யாழ்ப்பாணம் கொக்குவிலில் மந்திப்புலம் என்னுங் காணி கி. இலா. 3 குளி 15 வீடும் குசினியும் வான்பயிர் செய்பயிர்களும், எல்லை கிழக்கு ஒழுங்கையும் சின்னப்பு பெண் அன்னப்பிள்ளையின் ஆதனமும், வடக்கு சின்னவன் சடையனின் ஆதனம் மேற்கு சின்னவன் ராசாவின் ஆதனமும் பங்காளரும். தெற்கு பிச்சுக் குருக்கள் குமாரசாமிக் குருக்களின் ஆதனம் இவையடங்கலும்.

வ. அ. துரையப்பா
கொமிஷனர்

யாழ்ப்பாணம்
1-5-57.
M 5 10-5-57 (ரூ 100)

# சிவஞானமாபாடியம் தந்த செம்மல்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

துயில் கொள்ளுவார்களாம். இன்னும் துறைமங்களம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய நால்வர் நான்மணிமாலையையும் சிரசின் மேல் சூடுவாரென்றும் பெரியோர்கள் மூலம் அறியக் கிடக்கின்றது. இதனைத் திருமயிலை சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள் நால்வர் நாண்மணிமாலைப் பதிப்பு முகவுரையிற் கூறியுள்ளார்கள்.

சுவாமிகளை ஆதீன அடியார்கள், தங்கள் குலதெய்வமாகவும் யாழ்ப்பாணச் சைவசித்தாந்திகள் சற்குருவாகவும் போற்றி வருகிறார்கள். இந்த வழியை யாழ்ப்பாணத்துச் சைவமக்களுக்கிடையில் கைக்கொள்ளும்படி செய்த பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் அவர்களாவர். சுவாமிகள் அருளிய நூல்களைப் படிக்கும்படி நாவலர் அவர்கள் தூண்டியிருக்கின்றார்கள். திருவாவடுதுறை செல்லும் எந்த யாழ்ப்பாணச் சைவனும் சுவாமிகள் சமாதியைத் தரிசித்த பின்பே மடாலயம் புகுவர். அவர் சுவாமிகள் அடங்கிய சில வருடங்களின் பின் நாவலர் அவர்கள் திருவாவடுதுறையாதீனம் வந்து பிரசங்கம் செய்ய, அங்கிருந்த சந்நிதானங்கள், நாவலரைப் பார்த்து உங்கள் அறிவை அளவிடுதற்கு எங்களால் முடியாது. ஸ்ரீலஸ்ரீ சிவஞான சுவாமிகள் இருக்கும் பொழுது வந்திருந்தால் உங்கள் பெருமை இத்தனைத்தென்பது விளங்கியிருக்கலாம் எனச் சொல்லிக் கண்ணீர் வடித்தார்களாம். இப்படிச் சுவாமிகளைப்பற்றிப் பல கதைகளுண்டு. சுவாமிகள் முப்பத்திரண்டாம் வயசில் பரிபூரண சமாதியடைந்ததாகவும் கூறப்படுகின்றது. வயசு எவ்விதம் இருப்பினும் இம்மாதவச் செல்வர் சித்திரை மாதம் ஆயிலிய நட்சத்திரத்தில் சமாதியெய்தினர். இத்திருநாளைத் தமிழுலகம் கொண்டாடுக.

ஸ்ரீலஸ்ரீ சிவஞான சுவாமிகள் திருவடிவாழ்க!

யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 10-5-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org